DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Judicial Magistrate, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 221/2020** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | :டாக்டர்.திரு . ஸ்ரீதரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 03.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 03th July 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் உறைவிட மருத்துவ அலுவலராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பாக திருநெல்வேலி மருத்துவகல்லூரியில் சட்ட மருத்துவ துறையில் விரிவுளையாராக பணியில் இருந்தபோது கடந்த 08.01.2020–ம் தேதி சங்கரன்கோவில் நீதிமன்ற நடுவர் அவர்களின் உத்தரவு படி சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண்.09/2019 வழக்கில் சம்மந்தப்பட்ட இராமர் என்ற 28 வயது ஆண் நபரை ஆண்மைத்தன்மை பரிசோதனைக்காக முதல் நிலை காவலர் எண்.1970 திரு. மாசானம் மற்றும் முதல்நிலையக்காவலர் எண்.3201 திரு. ஆறுமுகக்கனி ஆகியோர்கள் அழைத்து வந்தார்கள். அன்றையதினம் பிற்பகல் 01.10 மணியளவில் ஆண்மை தன்மை மேற்படி

நபருக்கு பரிசோதனை மேற்கொண்டேன். பரிசோதனையின் போது அவர் உடல் அமைப்பிலும், மணதளவிலும், உரிய வயதுடன் சீராக கணப்பட்டார். முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாலியல் குணங்கள் சீராக காணப்பட்டன. நரம்பியல் குறையாடு எதுவும் காணப்படவில்லை. பாலின உறுக்புகள் சீராக காணப்பட்டதுடன், அவற்றில் காயங்களோ, கரைகளோ, பால்வினை நோய்களோ எதுவும் காணப்படவில்லை. மேற்குறிப்பிட்ட நபர் ஆண்மைத்தன்மை இல்லாதவர் என்று சொல்வதற்கு எதுவுமில்லை என்றும் அவரால் பாலின செய்லபாடுகளில் ஈடுபட இயலும் என்றும் கருத்துகூறி சான்றிதழ் வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் ஆண்மை தன்மை சான்றிதழ் நான் வழங்கியது தான். அந்த சான்றிதழ் ஆ.சா.ஆ.3 ஆகும். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை அனுமதிக்கப்பட்டும் சாட்சியை விசாரணை செய்ய எதுவுமில்லை என கூறப்பட்டது.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.